DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:**S.C.34/2026**

Prosecution Witness P.W.6

| | |
|---|---|
| Name:**திரு. சசிதரன்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

**நாள்: 22.06.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பெரியகுளம் தென்கரை தெற்கு புது தெருவில் குடியிருந்து வருகிறேன். ஜனா ஸ்மால் பைனான்ஸ் என்ற நிதி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன்.சாட்சிகள் கார்த்திகேயன், முத்து காமாட்சி, தணிகைவேல், நந்தகுமார், அருண் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரி முத்தையாவை எனக்கு தெரியும். சம்பவத்தைப் பற்றி எதுவும் தெரியாது. நான் சம்பவம் பற்றி எதுவும் கேள்விப்படவில்லை. எனக்கும், சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை போலீசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் 2ம் எதிரியாகிய தங்கபாண்டியை எனக்கு தெரியும், அவர் இந்த வழக்கில் 1ம் எதிரியின் உறவினர். எதிரி முத்தையாவின் வீடு எனக்கு தெரியும். எங்கள் வீட்டிலிருந்து சுமார் 150 மீட்டர் தூரமிருக்கும்.

துளசிமணியை எனக்கு தெரியும், அவர் இறந்த விபரத்தை கேட்டுத் தெரிந்து கொண்டேன். துளசிமணியின் இறப்பிற்கு முன்பு மறவர் மன்றத்தில் நடந்த கூட்டம் பற்றி எனக்கு தெரியும். மறவர் மன்றத்திற்கு அருகில் ஒரு சந்து உள்ளதென்றால் சரிதான்.

2. 11.08.2025ம் தேதியன்று நான், கார்த்திகேயன், அருண், நந்தகுமார் மற்றும் எங்கள் தெருவைச் சேர்ந்த நிறைய நபர்கள் பாண்டியா என்பவர் இறப்பு சம்பந்தமாக மறவர் மன்றத்தில் நடந்த கூட்டத்திற்கு சென்றோம் என்றும், அங்கு துளசிமணிக்கும், எதிரி முத்தையாவிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டதென்றும், இதனால் எதிரி முத்தையா, துளசிமணியை கொல்வதற்காக அருவாளை எடுத்து வீசினார் என்றும், அப்போது துளசிமணி தப்பித்துவிட்டாரென்றும், தப்பித்துவிட்டு மறவர் மன்றத்திற்கு அருகிலுள்ள சந்தின் வழியாக செல்லும்போது அங்கிருந்த 2ம் எதிரி தங்கபாண்டி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து துளசிமணியின் கழுத்திலும், அதன் அருகிலும் இரண்டு குத்துகள் குத்தினார் என்று அதனை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd/-A.Saravanakumar
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.